**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 121/2024 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரகிஷ் குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஜாண்சன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2025 ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்று தற்போது திக்குறிச்சியில் வசித்து வருகிறேன். கடந்த 25.04.2020 ம் தேதி கொற்றிக்கோடு காவல் நிலைய உதவி ஆய்வாளராகஇருக்கும் போது சுமார் 20.00 மணியளவில் குமாரபுரம் சரல்விளை, குருசடி அருகே நானும் தலைமை காவலர்கள் 1871, 1884 வாகன தணிக்கை செய்யும் போது ஆஜர் எதிரி TN 75 AA 7763 என்ற மகேந்திரா டிப்பர் வாகனத்தில் கால் யூனிட் மணல் திருட்டுத்தனமாக கொண்டு வந்ததை நான் ஒரு அத்தாட்சி தயார் செய்து அதில் வெளிநபர்கள் யாரும் கையெழுத்து போட முன்வராததால் காவல்துறையினராகிய நாங்களே கையொப்பம் செய்து எதிரி சொத்துக்களுடன் காவல் நிலையம் 21.00 மணிக்கு கொண்டு வந்து நிலைய குற்ற எண் 153/2020 சட்டப்பிரிவுகள் 379 இதச மற்றும் 21(1) MMDR Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மொத்த நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.3 ஆகவும், TN 75 AA 7763 என்ற மகேந்திரா டிப்பர் வாகனத்தின் புகைப்படங்கள் (2 எண்ணம்)**

**அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து தனிநபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் இருந்து வாகன தணிக்கை செய்ய எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சென்றோம். நேரம் தற்சமயம் ஞாபகம் இல்லை. நாங்கள் எத்தனை நபர்கள் வாகன தணிக்கை செய்ய சென்றோம் என்றால் நானும் தலைமை காவலர்கள் 2 நபர்கள் சென்றோம். நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எங்களுடைய சொந்த வாகனத்தில் சென்றோம்.

குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பெயர், முகவரி எவ்வாறு எங்களுக்கு தெரியும் என்றால் விசாரணையின் போது தெரியும். மணலின் மதிப்பு ரூபாய் 250 /– என்று குறிப்பிட்டுள்ளேன் எனறால் சரிதான், அப்போது மழைக்காலம் என்றால் ஞாபகம் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டில் இருந்த அழுக்கு மணலை எடுத்துச் சென்றார் என்றாலும் நாங்கள் காழ்புணர்ச்சி காரணமாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் வேறு யாரையும் விசாரணை செய்தேனா என்றால் ஆய்வாளர் விசாரணை செய்தார் நான் செய்யவில்லை . நான் பொய்யாக வழக்கு பதிவ செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது. .

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram (FAC)